*பிரசார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை*
*26 11 2025 WEDNESDAY 12 40 PM*
*ஆகாஷவாணி - செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

1. மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் அரசியல் சாசனம் இயற்றப்பட்ட தினத்தை ஒட்டி, நாடாளுமன்ற மைய மண்டபத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர், குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.
2. வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க, அனைவரும் நாட்டிற்காக கடமையாற்ற முன்வர வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.
3. விமானப் போக்குவரத்து தொழில்நுட்பத்தில், உலக அளவில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
4. மலாக்கா நீரிணை பகுதியில் உருவான Senyar புயல் வடகிழக்கு இந்தோனேஷியாவை கடக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>><<<<<<

மக்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கும் அரசியல் சாசனம் இயற்றப்பட்ட தினம், நாடு முழுவதும் இன்று கொண்டாடப்படுகிறது.

நாடாளுமன்ற மைய மண்டபத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா, பிரதமர் திரு. நரேந்திர மோடி, மத்திய அமைச்சர்கள் திரு. அமித் ஷா, திரு. ராஜ்நாத் சிங், திரு. ஜெ.பி. நட்டா, திரு. கிரண் ரிஜிஜு, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல் காந்தி, மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில், தெலுகு, மலையாளம் உள்ளிட்ட 9 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட அரசியல் சாசன புத்தகங்களை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டார்.

முன்னதாக, இந்நிகழ்ச்சியில் அரசியல் சாசன முகப்புரை உறுதிமொழி ஏற்கப்பட்டது.

>>>>>><<<<<<

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க, அனைவரும் நாட்டிற்காக கடமையாற்ற முன்வர வேண்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

அரசியல் சாசன தினத்தை ஒட்டி, குடிமக்களுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், நாட்டின் வளர்ச்சிக்கு அரசியல் சாசனத்திற்கு பங்கு இன்றியமையாதது என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 2015-ஆம் ஆண்டு முதல் ஒவ்வோராண்டும் நவம்பர் 26ஆம் தேதி அரசியல் சாசன தினமாக கொண்டாட, மத்திய அரசு முடிவெடுத்ததை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் ஜனநாயகத்தை வலுப்படுத்த வாக்குரிமையை ஒவ்வொரு குடிமகனும் பயன்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரசியலமைப்பு சபையின் உறுப்பினர்களான டாக்டர் ராஜேந்திர பிரசாத், டாக்டர் பாபாசாகேப் அம்பேத்கர் மற்றும் அரசியல் சாசனத்தை உருவாக்கிய உறுப்பினர்களை பிரதமர் நினைவுகூர்ந்துள்ளார்.

*>>>>>><<<<<<*

*சர்தார் வல்லபாய் பட்டேல் மற்றும் பகவான் பிர்ஸா முண்டாவின் 150வது ஆண்டு பிறந்த தினம் கொண்டாடப்பட்டு வரும் நிலையில், இந்த ஆண்டின் அரசியல் சாசன தினம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்று திரு. நரேந்திர மோடி அந்த கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.*

*இந்நாளையொட்டி, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நாட்டின் வளர்ச்சிக்கு வழிகாட்டியாக திகழும், அரசியல் சாசனத்தை உருவாக்கிய தலைவர்களுக்கு தமது மரியாதையை செலுத்துவதாக தெரிவித்துள்ளார்.*

*சட்டமேதை பி.ஆர். அம்பேத்கரின் தொலைநோக்குப் பார்வைக்கேற்ப, நீதி, சுதந்திரம் மற்றும் சமத்துவத்தின் அடிப்படையிலான கொள்கையை அனைவரும் பின்பற்ற வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*>>>>>><<<<<<*

*விமானப் போக்குவரத்து தொழில்நுட்பத்தில், உலக அளவில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.*

*ஹைதராபாதில் Safran விமான இயந்திர சேவை நிறுவனத்தை காணொலி வாயிலாக இன்று திறந்து வைத்துப் பேசிய அவர், இத்துறையில் முதலீடு செய்ய உலக நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.*

*நாட்டின் விமான இயந்திர உற்பத்தி துறை வளர்ச்சியடைந்து வருவதாக கூறிய பிரதமர், இந்த நிறுவனம் மூலம் விமான எஞ்சின்களை பராமரிப்பதற்கான வசதிகள் மேம்படுத்தப்படும் என்று கூறினார்.*

*>>>>>><<<<<<*

*மும்பை தீவிரவாத தாக்குதல் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.*

*இந்நாளையொட்டி, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், நாட்டு மக்களுக்காக இன்னுயிர் ஈந்த பாதுகாப்பு படையினருக்கு மரியாதை செலுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.*

*தீவிரவாதத்தை முற்றிலும் ஒழிக்க ஒவ்வொரு குடிமகனும் உறுதியுடன் செயல்பட வேண்டும் என்று குடியரசுத்தலைவர் கேட்டுக் கொண்டுள்ளார்.*

*இந்நாளையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் திரு. ராகுல் காந்தி உள்ளிட்ட தலைவர்களும் உயிரிழந்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தியுள்ளனர்*

*>>>>>><<<<<<*

*மலாக்கா நீரிணை பகுதியில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று காலை புயலாக வலுப்பெற்றுள்ளது.*

*Senyar என்று பெயரிடப்பட்டுள்ள இந்தப் புயல், இன்று வடகிழக்கு இந்தோனேஷியாவை கடக்கக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*(சவுண்ட் பைட் - செந்தாமரை (1) 24 செகண்ட்ஸ்)*

*தென்மேற்கு வங்கக்கடலை ஒட்டிய, தெற்கு இலங்கை கடலோரப் பகுதியில் நிலவும் மற்றொரு காற்றழுத்த தாழ்வுப் பகுதி இன்று காலை ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலுப்பெற்றுள்ளதாக அவர் கூறினார்.*

*(சவுண்ட் பைட் - செந்தாமரை (2) 18 செகண்ட்ஸ்)*

*>>>>>><<<<<<*

பிரதமரின் பயிர்க் காப்பீட்டு திட்டம், விவசாயிகளுக்கு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

காப்பீடு செய்வதற்கான காலவரம்பு வரும் 30ஆம் தேதிவரை கால நீட்டிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது என்று நாகை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் – விவசாயிகள் 30 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

நாட்டின் நிர்வாக கட்டமைப்புக்கு மத்திய பணியாளர் தேர்வாணையம் முக்கிய பங்கு வகிப்பதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் நூற்றாண்டு விழாவில் உரையாற்றிய அவர், வெளிப்படைத்தன்மை மற்றும் நம்பகத்தன்மை மூலம் உலகிலேயே மிகச் சிறந்த பணியாளர் தேர்வாணையமாக இது உருவெடுத்துள்ளதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், நாட்டில் மிகச் சிறந்த பணியாளர்களை தேர்வு செய்வதில் மத்திய பணியாளர் தேர்வாணையம் முக்கிய பங்கு வகித்து வருவதாக தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தில்லி கார் குண்டுவெடிப்பில் தொடர்புடைய தீவிரவாதி Umar Un Nabi-க்கு அடைக்கலம் அளித்ததாக கூறி, ஹரியானா மாநிலம், ஃபரிதாபாத்தைச் சேர்ந்த ஒருவரை தேசிய புலனாய்வு அமைப்பு இன்று கைது செய்துள்ளது.

கடந்த 10ஆம் தேதி, தில்லி செங்கோட்டை அருகே நிகழ்ந்த இந்த கார் குண்டுவெடிப்பு சம்பவத்தில் 14 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

>>>>>><<<<<<

ஐ.நா-வின் புதிய பொதுச்செயலாளரை தேர்வு செய்வதற்கான நடைமுறைகள் தொடங்கியுள்ளதாக ஐ.நா பொதுச்சபை தலைவர் திருமதி. **Annalena Baerbock** தெரிவித்துள்ளார்.

அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், இதுதொடர்பாக ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் தலைவருடன் இணைந்து, நடைமுறைகள் இறுதி செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

வரும் 2027ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஒன்றாம் தேதி ஐ.நாவின் புதிய பொதுச்செயலாளர் பதவியேற்பார்.

>>>>>><<<<<<

உலக இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா வெள்ளிப்பதக்கம் வென்றது.

ருமேனியாவில் நடைபெற்ற இப்போட்டியின் 19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் பிரிவில் இந்தியா இப்பதக்கத்தை கைப்பற்றியது.

>>>>>><<<<<<

சையத் மோடி சர்வதேச பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் Alap Mishra காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

லக்னோவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-16, 15-21, 21-19 என்ற செட்கணக்கில் Lakshay Sharma-வை வென்றார்.

இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் Tasnim Mir, உத்தனத்தி ஹூடா, ரக்ஷிதா ஆகியோர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

>>>>>><<<<<<

***அஸ்லான்ஷா கோப்பைக்கான ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று மலேசியாவை எதிர்கொள்கிறது.***
***மலேசியாவில் இப்போட்டி பிற்பகல் மணி 3.30-க்கு தொடங்குகிறது.***

*>>>>>><<<<<<*

***Deaflympics போட்டியில் இந்தியா 9 தங்கம், 7 வெள்ளி, 4 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.***
***ஜப்பானின் டோக்கியோவில் நடைபெற்ற இப்போட்டியில், 20 பதக்கங்களுடன் இந்தியா 6வது இடத்தை பிடித்துள்ளது.***

*>>>>>>END<<<<<<*